2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் காளவாசல், சந்திக்குளம் மற்றும் மதுரை மாநகரத்தில் உள்ள பெரியார் பேருந்து நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் கட்ட வேண்டிய பாலங்களின் நிலை என்ன என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012-2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் இந்த இரண்டு இடங்களிலும் பாலம் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தற்போது இந்த இரண்டு பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, காளவாசல் பகுதிக்கும், பெரியார் பேருந்து நிலையப் பகுதிக்கும் 2 உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி நடைபெறுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 363, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

363—

கயிறு தொழிற்சாலை

***20103—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் இரும்பாலை அருகே கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் இரும்பாலை அருகில் கயிறு தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு

[2014 ஆகஸ்ட் 7

ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, தொழில் முனைவோர்கள் அங்கு தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அரசின் மானியத்தைப் பெற்று பயன்பெறலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், இரும்பாலை அருகில் சேலம் ஒன்றியம், வீரபாண்டி ஒன்றியம், தாரமங்கலம் ஒன்றியம், ஓமலூர் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் ஏறக்குறைய 50,000-க்கும் மேற்பட்டவர்கள் கயிறு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் சேலம் இரும்பாலைக்கு அந்தக் காலத்திலே நிலம் கொடுத்துள்ளனர். இதைத் தவிர, வேறு தொழில்கள் அவர்களுக்குத் தெரியாது. இரும்பு ஆலைக்காக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் கொடுத்ததில், 1,400 ஏக்கர் நிலத்தை அவர்கள் பயன்படுத்தியதுபோக, மீதம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அந்தப் பகுதிகளில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்புகூட கயிறு தயாரிக்கும் தொழிலுக்கென்று ரூ.100 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்கள். மத்திய அரசின்மூலம் அதிகாரிகள் அப்பகுதிக்கு வந்து 4, 5 மாதங்களாகத் தங்கி ஆய்வு செய்துவிட்டு ** 1980 ஆம் ஆண்டுக்கு முன்பு, சேலம் மாவட்ட மத்திய கயிறு தொழிற்சங்கத்தின்கீழ் 20-க்கும் மேற்பட்ட கூட்டுறவுத் தொழிற்சங்கங்கள் இருந்தன. அந்தப் பகுதிகளில், குறிப்பாக கிராமப் பகுதிகளில் 95 சதவிகிதம் பேருக்கு இத்தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளில் இரும்பு ஆலைக்காக கொடுத்த நிலங்களில் பயன்படுத்தியதுபோக, மீதமுள்ள நிலங்களை மத்திய அரசிடமிருந்து திரும்பக்கேட்டுப் பெறவேண்டும். ஏனென்றால், சேலம் மாவட்டத்திலிருந்து இந்தியா முழுவதற்கும், மேலும், வெளி நாடுகளுக்கும் கயிறு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வாய்ப்பு இருக்கின்றது. ** (குறுக்கீடுகள்) நான் தவறாகச் சொல்லவில்லை. கோரிக்கைதான் வைக்கிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைதான் வைக்கிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கைதான் வைக்கிறேன். அந்தப் பகுதிகளில் நிறைய நிலங்கள் இருக்கின்றன. எனவே அப்பகுதிக்கு ஒரு துணை மண்டலம் அமைக்கவேண்டும் என்று கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் தேவையில்லாத பிரச்சினைகளையெல்லாம் பேசவேண்டாம். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *நான் உங்களைக் குறை சொல்லவில்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அப்பகுதியில் இருக்கின்றார்கள். மத்திய அரசின் கயிறு வாரியம் கொச்சியில் இருக்கின்றது. துணை மண்டலம் பொள்ளாச்சியில் இருக்கின்றது. அதுபோல் சேலம் மாவட்டத்தில் இரும்பாலை உள்ள பகுதியில், மத்திய அரசின் துணை மண்டல அலுவலகத்தைக் கொண்டுவரவேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தது போல, இந்தக் கயிறு தொழிற்சாலைகளுக்கு உரிய நிதியினை ஒதுக்கி, கயிறு தொழிலில் ஈடுபட்டுள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு கேள்விக்கே ஐந்து நிமிடம் எடுத்துக்கொண்டால் எப்படி? (குறுக்கீடு) அதெல்லாம் வேண்டாம். நீங்கள் கேள்வி மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது. அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் கேள்விதான் கேட்கவேண்டும். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2014 ஆகஸ்ட் 7

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு வந்த ஒரு தொழிற்கூடம் வேறு மாநிலத்திற்கு சென்றது என்று சொன்னார்கள். அது தவறான கருத்து என்பதை முதலில் பதிவு செய்ய விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே சேலம் மாவட்டம் கயிறு உற்பத்தித் தொழிலில் சிறந்த மாவட்டமாக விளங்குகிறது என்பது உண்மை. இந்தியாவிலேயே கேரளாவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடுதான் கயிறு உற்பத்தித் தொழிலில் இரண்டாவது மாநிலமாக இருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, பழுப்புநிற தென்னை நார் உற்பத்தியில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; கயிறு பொருட்களை ஏற்றுமதி செய்வதில் தமிழகம் இரண்டாவது இடம் வகிக்கிறது என்பதை நான் இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேலம் மாவட்டத்தில் கயிறு உற்பத்தி செய்கின்றவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். சேலம் மாவட்டத்தில் சுமார் 560 கயிறு தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. அதில் 60 தொழிற்சாலைகள் நார் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, சேலம் இரும்பாலைக்கு அருகில் அழகுசமுத்திரம் கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 338 உறுப்பினர்களுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும், மேலும் 'SFURTI' *திட்டத்தின்கீழ், ஒரு கயிறு குழுமம் 86.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேலம் உருக்காலை பகுதியில் நிறுவப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்நிலையில் அரசின் சார்பாக தனியாக ஒரு கயிறு தொழிற்பேட்டை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றபிறகு 2013-2014-லே மட்டும் மாநில அரசின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை

2014 ஆகஸ்ட் 7]

உருவாக்கும் திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தில் 5 கயிறு தொழிற்சாலைகள் ரூபாய் 11.25 இலட்சத்தில், 1,25,000 ரூபாய் மானியத்தோடு தொடங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும் பணிவோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 4 புதிய கயிறு தொழிற்சாலைகள் ரூபாய் 29.50 இலட்சம் மதிப்பீட்டில் இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான திட்டமான 'NEEDS' திட்டத்தில், ஒரு கோடி ரூபாயில் கயிறு தொழிற்சாலை இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது என்கின்ற நல்ல செய்தியையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயிறு உற்பத்தியிலே தமிழ்நாடு இரண்டாவது இடத்திலே இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் நான் சொல்கின்ற பகுதியிலே, நிறைய அளவில் கயிறு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்றுமதிக்கு நிறைய வாய்ப்பு இருப்பதாலே அவற்றைக் கொள்முதல் செய்து, அரசின் மூலமாக ஏற்றுமதி மண்டலம் அந்தப் பகுதியிலே அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிலைப்பாடெல்லாம் இதிலே இருக்கின்ற காரணத்தால், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மண்டலங்கள் அமைக்கப்படுவதற்கு கருத்துரு ஏதேனும் இருக்குமானால், தேவை ஏற்படுமேயானால், அவற்றைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*